**24.04.2025**

**MCOP.No.114/2022**
**ம.சா.1 : வெண்ணிலா**
**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) விபத்து சுமார் மதியம் 2.30 மணிக்கு நடைபெற்றது. நான் சென்றது ஆமினி வேன். லத்துவாடி கிராமத்தில் இருந்து சென்னைக்கு என் மகளை சென்னைக்கு விட்டுவிட்டு திரும்பி வரும் போது விபத்து நடைபெற்றது. 20.02.2022ல் விபத்து நடைபெற்றது என்றும் 2 நாட்கள் கால தாமதமாக புகார் கொடுத்தோம் என்றால் சரிதான். என் தம்பி தான் புகார் கொடுத்தார்.

2) நான் காரில் செல்லும் போது சீட் பெல்ட் அணியவில்லை என்று சொன்னால் சரிதான். நான் சென்ற காரின் ஓட்டுநர் தான் விபத்தை ஏற்படுத்தினார் என்றால் முன்னால் வண்டி சென்று கொண்டு இருந்த லாரி திடீர் என்று மெதுவாக சென்றதால் விபத்தை நடுப்பதற்காக ஆமினி ஓட்டுநர் வண்டியை திருப்பும் போது இடது பக்கத்தில் இருந்த கம்பியில் மோதி விபத்து ஏற்பட்டது.

3) ஆமினி ஓட்டுநர் மீது தான் முதல் தகவல் அறிக்கை மற்றும் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆமினி ஓட்டுநர் தான் அதிக வேகமாக ஓட்டி சென்று வாகனத்தை சரியாக ஓட்ட முடியாமல் (control) விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் TN77L4696 என்ற ஆமினி வண்டியை நான் வாடகைக்கு பேசி எடுத்து சென்றதாக எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அது எ.மா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி விவரத்தை நான் மேற்படி மனுவில் சீனிவாசன் என்பவருக்கு சொந்தமான TN77L4696 என்ற ஆமினி காரை வாடகைக்கு பேசி ராஜசேகரன் என்பவர் ஓட்டுநராக என்று தெளிவாக மனுவில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

4) நான் தாக்கல் செய்த ம.சா.ஆ.13 படி ஆமினி வண்டியின் பதிவு சான்று சொந்த உபயோகத்திற்கு என்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது மஞ்சள் நிற வாகன பதிவு கொண்ட வாடகை வாகனம் என்று பதிவு செய்யப்படவில்லை. உண்மையில் காரின் உரிமையாளர் 2ம் மஎதிர்மனுதார் தன் சொந்த பயன்பாட்டிற்காக வாகனத்தை வாங்கி பதிவு செய்துள்ளார். ஆனால் காப்பீட்டு விதிமுறைகளுக்கு மீறி அதை 2ம் எதிர்மனுதாரர் வாடகைக்கு விட்டுவிட்டுள்ளதால் 3ம் எதிர்மனுதாரர் நிறுவனம் இழப்பீடு கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

5) மேற்படி 20.02.2022ல் தேதி ஏற்பட்ட விபத்திற்கு காப்பீட்டு விதிமுறைக்கு மீறி ஆமினி வண்டியில் நான் பயணம் செய்ததால் 3ம் எதிர்மனுதாரர் நிறுவனம் இழப்பீடு கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்றும், 2ம் எதிர்மனுதாரர் விபத்து சம்பந்தமாக இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றும், 3ம் எதிர்மனுதாரர் பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனக்கு 40 வயது.

6) நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.7 கங்கா மருத்துவ குறிப்பிலும், ம.சா.ஆ-6 கள்ளக்குறிச்சி அரசு மமருத்துவ குறிப்பிலும் Post Hypo Thyroid என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.8 மருத்துவ பில்களில் ரூ. 83,690ல் டையட் சார்ஜ் மற்றும் எம்.என்.சி சார்ஜ் ரூ. 2590/- அனுமதிக்கப்பட்ட தலைப்பு அல்ல என்றால் சரியல்ல. எனவே வேறு ஊட்டசத்து என்ற தலைப்பில் கழிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல. அதே போல் எம்.எல்.சி சார்ஜ் ரூ. 5000 மருத்துவம் அல்லாத செலவினங்கள் என்பதால் அவை கழிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

7) நான் தாக்கல் செய்துள்ள கங்கா மருத்துவமனை சான்றிதழ் 04.04.2022 முதல் 31.12.2024 வரையிலான மருத்துவ பில்கள் இல்லாமல் ரூ. 4100

குறிப்பிடப்ப்டுள்ளது என்றும் எனவே மேற்கண்ட இனங்களுக்கான தொகை ரூ. 69,085 -யை மட்டும் அனுமதிக்கதது என்றும் அதை மட்டுமே நான் பெற தக்கது என்றால் சரியல்ல. அதே போல் சேலம் அம்மினி மருத்துவமனை பில்களில் லேப் சார்ஜ் ரூ. 500 கழிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல. மருத்துவம் அல்லாத பில்கள் மற்றும் பதிவுக்கான பில்கள் ரூ. 1,300 கழிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல. எனவே ரூ. 37,500 -யை மட்டும் அனுமதிக்கதது என்றும் அதை மட்டுமே நான் பெற தக்கது என்றால் சரியல்ல. ( கழிக்கப்பட வேண்டிய பில்கள் வரிசை எண். 4 மற்றும் 6).

8) ம.சா.ஆ.10 பிரியம் மருத்துவமனை பெரம்பலூர் பில்கள் ரூ. 3,385/- ல் லேப் சார்ஜ் ரூ. 500 கழிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல. எனவே ரூ. 2,885-யை மட்டும் அனுமதிக்கதது என்றும் அதை மட்டுமே நான் பெற தக்கது என்றால் சரியல்ல. அதே போல் ம.சா.ஆ-11 கார்டியோ கேர் கள்ளக்குறிச்சி பில்கள் ரூ. 8,048/- மட்டுமே நான் பெற தக்கது என்றால் சரியல்ல. பின்னிட்டு கானா ஆர்தோ கேர் புராடெக் 4வது அயிட்டம் ம.சா.ஆ.12ல் ஒரு முறை மட்டுமே எனக்கு கிடைக்கதக்கது என்றும் ரூ. 16,500/- என்று போடப்பட்டுள்ளது என்றும் அதில் ஒரு முறை மட்டுமே ரூ. 4,800/- அதை மட்டுமே நான் பெற தக்கது என்றால் சரியல்ல. எனவே அதில் கழிக்கப்பட வேண்டிய தொகை ரூ. 12,790/-என்றால் சரியல்ல. மொத்தம் காலனிக்கு என மனுதாரர் ரூ.4800/-க்கு கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.

9) எனவே மனுதாரர் கோரியுள்ள மொத்த பில்களில் கழிக்கப்படவேண்டியது ரூ. 12,790/- எனவே அனுமதிக்கப்பட வேண்டிய தொகை ரூ. 1,37,604/- என்றால் சரியல்ல. என் முன் விசாரணையில் விபத்திற்கு பின்னிட்டு 4 லட்சத்திற்கு செலவான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் முன் விசாரணையில் குத்தகை விவசாயம் செய்வதாகவும், ஆடு, மாடு, கோழி

வளர்ப்பதாகவும் அதில் மாதம் ரூ. 15 ஆயிரம் வருமானம் வருவதாக சொல்லியுள்ள சங்கதிகளுக்கு ஆவணம் ஏதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

10) என் முன் விசாரணையில் இந்த விபத்தினால் என் மகளின் பாதியில் படிப்பு நின்றுவிட்டதாக சொல்லியுள்ளது மனுவிற்காக மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மருத்துவ குழுவில் 20 சதவீதம் ஊனம் தான் எனக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும், ஆனால் எனது மனுவில் 50 சதவீதம் ஊனம் என்று தனியார் மருத்துவமனையில் சொல்லப்பட்டுள்ளதாக மனுவிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

11) நான் அரசு மருத்துவ குழுவின் முன்பு ஆஜார் ஆகி தான் ஊன சான்று பெற்றுள்ளேன் என்றால் சரிதான். எனவே அதன் படி எனக்கு ஊன சதவீதம் 20 தான் வழங்க முடியும் என்று சொன்னால் சரியல்ல. மேலும் ஊட்ட சத்திற்காக தனியார் மருத்துவமனையில் ரூ. 2 இலட்சம் வரை செலவு செய்ததாகவும், சிகிச்சை பெற்றதற்கும் ஆவணம் ஏதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

12) நான் கோவை கங்கா மருத்துவமனையில் பெற்ற பில்களில் 12 வரிசை பில்கள் இல்லாததால் அவை கழிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல. உண்மையில் நான் விபத்திற்கு இழப்பீட்டை 2ம் எதிர்மனுதாரரிடம் தான் கேட்கவேண்டும் என்றும், 3ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு விதிமுறைகள் மீறப்பட்டுள்ளதால் இழப்பீடு வழங்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S Digitally signed by GANESAN S
Date: 2025.04.24 18:21:28 +0530

**Accidents Claim Tribunal,
Attur.**